(289)

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 946/8 - 1996 ඔක්තෝබර් 23 වැනි බදාදා - 1996.10.23

946/8 ஆம் இலக்கம் - 1996 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வை. பி 21/78 IV

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்

திருமதி சி. எஸ். கருணாரத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள்
ஆணைக்குழு.

கொழும்பு,
1996.10.21.

### கட்டளைச்சட்டம்

1\. இக்கட்டளைச் சட்டம் 1996 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கமத்தொழில் பட்டப்பின்படிப்பு நிறுவகக் (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்மேல் வலுவுக்கு வருதலும் வேண்டும்

2\. 1979 திசெம்பர் 26 ஆந் தேதிய, 68/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கமத்தொழில் பட்டப் பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டமானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அதன் 10 ஆம் பந்தியில் —

(1) அப்பந்தியின் (1) ஆம் உபபந்தியில (எ), (ஏ), (ஐ), (ஒ) அத்துடன் (ஔ) என்னும் வாசகங்களுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வாசகங்களை இடுவதன்மூலம் :—

"(எ) கூழல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஏ) வனத் திணைக்களத்தின் தலைவர் ;

(ஐ) கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்குப் பொறுப்பான தேசிய நிறுவனத்தின் நிறைவேற்றுத் தலைவர் ;

(ஒ) கமத்தொழில் திணைக்களத்தின் தலைவர் ;

(ஔ) கமத்தொழில் ஏற்றுமதித் திணைக்களத்தின் தலைவர் ;".